

## தமிழ்நாடு திரைப்பட அரசு விருதுகள் (2016 – 2022), சின்னத்திரை விருதுகள் (2014– 2022)

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - விருதுகளை வழங்கிச் சிறப்புரை!

***சென்னை,பிப்.15-***

***சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு திரைப்பட அரசு விருதுகள் (2016-2022) சின்னத்திரை விருதுகள் (2014-2022) மற்றும் 2015-2016 முதல் 2021-2022-ஆம் கல்வி ஆண்டுக்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் தான் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனமாணவர் விருதுகள் வழங்கும் விழா, நேற்று முன்தினம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.***

***விழாவுக்கு தலைமையேற்று, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திரைப்பட கலைஞர்களுக்கும் சின்னத்திரை கலைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் விருதுகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.***

***இதில் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், திரைப்படத்துறை, சின்னத்திரையைச் சேர்ந்த கலைஞர்கள், விருதாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.***

***விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:***

தமிழ்நாடு அரசின் சிறந்த திரைப்பட விருது, சின்னத்திரை விருது மற்றும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருது ஆகியவற்றை இங்கு வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.




### துடிப்பான திரையுலகம்

இந்தியாவிலேயே மிகவும் துடிப்பான திரையுலகம் என்றால், அது தமிழ்த் திரையுலகம்தான். ஒவ்வொரு பாணியிலும் சிறந்த படங்களை, நம் தமிழ்த் திரையுலகம் வழங்கியிருக்கிறது. தமிழ்நாட்டையும் திரை மற்றும் தொலைக்காட்சித் துறையையும் என்றுமே நாம் பிரித்துப் பார்க்க முடியாது. அதற்கு இந்த அரங்கமே ஒரு சிறந்த உதாரணம். தமிழ்த் திரையுலகின் மிக மூத்தக் கலைஞர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் பெயரில், உள்ள இந்த அரங்கில்தான் இந்த நிகழ்ச்சியே நடைபெறுகிறது.

நான் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கலைத்துறை சம்பந்தமான எந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளாமல் இருந்தேன். ஆனால், இந்த நிகழ்ச்சியை என்னால் தவிர்க்க முடியவில்லை. ஏனெனில், நானும் உங்களில் ஒருவனாக இருந்து வந்தவன்தான். நீண்ட நாட்களுக்குப் பிறகு பள்ளிக்கூடத்துக்கு வந்தது போல் தோன்றுகிறது. அந்த உரிமையோடும் பெருமையோடும்தான் உங்களைச் சந்திக்க வருகை தந்துள்ளேன்.

### ஓய்வுபெற்ற நீதியரசர்

இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டதுமே சில விமர்சனங்கள் வந்தன. அவர்களுக்கெல்லாம் நான் சொல்கின்ற ஒரே பதில், பல ஆண்டுகாலமாக இந்த விருதுகள் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், இந்த விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்தார். உடனே, இதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் கே.பி.கே.வாசுகி தலைமையில், ஒரு தேர்வுக்குழுவையும் நியமித்தார்கள். அந்தத் தேர்வுக்குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில்தான் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. கலைத்துறையில் இருக்கும் உங்கள் எல்லாருக்குமே தெரியும், விருது என்று சொன்னால், எல்லாருக்குமே கொடுக்க முடியாது.

விருது பெற்றவர்கள் தமிழ்க் கலைத்துறைக்கு எவ்வளவு பெருமைகளைத் தேடித் தந்து கொண்டிருக்கிறீர்களோ, அதே அளவு மற்றவர்களும் பெருமைகளைத் தேடித்தந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான அங்கீகாரமும் நிச்சயம் அவர்களைத் தேடி வரும். ஆகவே, இன்று இந்த விருதுகளை வாங்க வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அண்ணா, கலைஞர்

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என இருவரும் கலைத்துறையில் எவ்வளவோ சாதித்திருக்கிறார்கள். கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் மட்டுமல்ல, கலைத்துறையில் மிகவும் ஈடுபாடுடன் இருந்தவர்கள்தான் இவர்கள் இருவரும். தமிழ் சினிமாவின் போக்கையே மாற்றியவர்களும் இவர்கள்தான். நம் முதலமைச்சர் அவர்கள் திரைத்துறையிலும், சின்னத்திரையிலும் பங்கேற்றுள்ளார்.

இன்று தமிழ்த் திரையுலகம் உள்ளடக்கம் (Content) மற்றும் தொழில்நுட்பம் (Technical) என எல்லா வகையிலும் மிகவும் சிறப்பான இடத்தில் உள்ளது. இன்று இந்த விருதுகளை வழங்க ஒரேயொரு காரணம்தான் உண்டு. நல்ல படைப்புகளையும், கலைஞர்களையும் கொண்டாட வேண்டும் என்பதற்காக, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. அதேபோல, நம்முடைய கலைஞர்களை மேலும் மேலும் ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் வழங்கப்படுகின்றன.

### திரைப்படம் – சின்னத்திரை விருதுகள்

இன்று 2016 முதல் 2022 - ஆம் ஆண்டு வரையிலான தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், கலைஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எங்களின் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல், 2014 முதல் 2022 வரையிலான தமிழ்நாடு அரசின் சின்னத்திரை விருதுகளும் இங்கே வழங்கப்பட்டுள்ளன. சின்னத்திரை கலைஞர்களைப் பொறுத்தவரை, நீங்கள் அனைவரும் தமிழ் மக்களின் குடும்பங்களில் ஒருவராகவே ஆகிவிட்டீர்கள். தொலைக்காட்சியில் நீங்கள் சிரித்தால், எல்லா வீடுகளிலும் சிரிக்கிறார்கள். நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு அழுதால், எல்லாரும் வருந்துகிறார்கள். அந்த அளவுக்கு ஒவ்வொரு குடும்பத்துடனும் மிகவும் நெருக்கமாக இருப்பவர்கள்தான் நீங்கள்.

ஆகவே, உங்களுக்குக் கிடைக்கிற இந்த விருதையும் மக்கள் தங்களுக்குக் கிடைத்த விருதாகவே எண்ணிக் கொண்டாடுவார்கள். அப்படிப்பட்ட சின்னத்திரை கலைஞர்களுக்கும் எங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதுதவிர, இன்று 2015 முதல் 2022 வரையிலான கல்வியாண்டிற்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. திரைப்படக் கல்லூரிதான் தமிழ் சினிமாவுக்குப் புதுமையான இயக்குநர்களையும், கலைஞர்களையும், தொழில்நுட்ப வல்லுநர்களையும் தருகின்ற நிறுவனம். அந்த வகையில், அங்கு பயின்று விருது பெற்றுள்ள எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்களுக்கும் எங்களின் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### சர்வதேசத் திரைப்பட விழா

திரைத்துறையின் வளர்ச்சிக்கும், திரைக்கலைஞர்கள் முன்னேற்றத்திற்கும் நம் அரசு என்றுமே துணை நிற்கும். குறிப்பாக, நம்முடைய அரசு அமைந்த இந்த 5 ஆண்டுகளில் மட்டும், 805 உறுப்பினர்களுக்குச் சுமார் 47 லட்சம் மதிப்பிலான கல்வி உதவித்தொகை, விபத்துக் காப்பீடு, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை என ஏராளமான நலத்திட்டங்களைக் கொடுத்துள்ளது.

தமிழ் திரைப்படங்களுக்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைக்கவும், உலகத் திரைப்படங்களைத் தமிழ் நேயர்களிடம் கொண்டு வந்து சேர்க்கவும், நம்முடைய அரசு உங்களுக்குத் துணையாக இருக்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் சர்வதேசத் திரைப்பட விழா (International Film Festival) நடத்த, சுமார் 4 கோடியே 15 லட்சத்தை நம் முதலமைச்சர் அவர்கள் மானியமாகத் தந்துள்ளார்கள். அது மட்டுமல்லாமல், தமிழ்த் திரையுலகின் மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கும் வகையில், கலைஞர் அவர்களின் பெயரில் ‘கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது’ வழங்கப்பட்டு வருகிறது. இப்படி கலையுலகினருக்குக் கழக அரசு என்றைக்குமே உற்றத் துணையாக இருந்து வருகிறது.

### கலைமாமணி விருதுகள்

இந்த நேரத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லி நிறைவு செய்ய விரும்புகிறேன். 2009-ஆம் ஆண்டு கலைமாமணி விருதுகள் வழங்கும் விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசும்போது, ``கலைஞர்களாகிய உங்களுக்குச் சர்வதேச விருதுகள் கிடைக்கும், தேசிய விருதுகள் கிடைக்கும். ஆனால், எந்த விருதும் தாயின் முத்தத்திற்கு ஈடாகாது. அது போலத்தான் தமிழ்நாடு அரசு வழங்குகிற விருதுகளும். இந்த விருதுகள் எல்லாம் தாயின் முத்தத்திற்குச் சமமானது” என்று கூறினார்கள்.

அப்படிப்பட்ட விருதுகளைப் பெற்றுள்ள உங்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை வாழ்த்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாவில் வாழ்த்துரை வழங்கினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கே. சேகர்பாபு, கயல்விழி செல்வராஜ், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி, ஜோசப் சாமுவேல், துறையின் அரசு செயலாளர் ராஜாராமன் ஐ.ஏ.எஸ்., துறை இயக்குநர் மருத்துவர் வைத்தியநாதன் ஐ.ஏ.எஸ்., துணை மேயர் மகேஷ்குமார், திரைப்பட இயக்குநர் அமிர்தம், வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், மற்றும் ஏராளமான திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர்கள், நடிகைகள், விருது பெறும் கலைஞர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

